**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 444/2023**

**Prosecution witness : அ.சா.1** **Date : 14.11.2025.**

| | |
|---|---|
| **Name : சின்னதாயி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சொறையூரில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்கிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் என் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்கள். 15.09.2022ம் தேதி வியாழக்கிழமை இரவு 9 மணியளவில் ஆஜர் எதிரிகள் நால்வரும் மது அருந்திவிட்டு எங்கள் வீட்டின் அருகே வந்து நானும் என் கணவரும் வீட்டு கட்டிலில் அமர்ந்திருந்த போது தெவிடியா போன்ற அசிங்கமான வார்த்தைகளால் இளஞ்ஜோடிகள் அமர்ந்திருக்கிறார்கள், எப்போது தாலி கட்டினார்கள் என பேசினார்கள். என் கணவர் அவர்களை பார்த்து நாங்கள் உங்களுக்கு என்ன செய்தோம், ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டார்.

2) குணசீலன், செந்தில்குமார் ஆகியோர் என்னை கையால் அடித்தார்கள். சத்தம் கேட்டு செல்வராஜ் அங்கு வந்தார். அப்போது செல்வராஜை குணசீலன், செந்தில்குமார், இளங்கோ மற்றும் சரஸ்வதி செல்வி ஆகியோர் கட்டையால் அடித்ததில் எனக்கு தலையில் அடிப்பட்டது. கட்டையால் அதிகமாக அடித்ததால் எனக்கு மயக்கம் வந்தது. குமரவேல் வந்து எங்களை காப்பாற்றினார். இல்லையென்றால் அப்போதே எங்களை கொன்று இருப்பார்கள்.

3) ஆம்புலன்ஸ் மூலம் என்னை மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம்

வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். ஆஜர் எதிரிகள் தான் அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

4) நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தவாறு போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் ஆமாம். சம்பவம் இரவு 9 மணிக்கு நடந்தது என்றால் ஆமாம். எவ்வளவு நேரம் நடந்தது என்றால் ஒரு மணி நேரம் நடந்தது. எதிரிகள் மது அருந்தினார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. 2ம் எதிரி நீங்கள் அடித்துவிட்டதாக ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பதிவேடு உள்ளது என்றால் ஆமாம். நீதிமன்ற விசாரணையில் என்னுடைய கணவரை பேசியதாகவும், அதற்கு எனது கணவர் எதிரிகளிடம் நாங்கள் என்ன செய்தோம் ஏன் பிரச்சனை செய்கிறிர்கள் என்று கேட்டதற்கு அவர் தனிப்பட்ட முறையில் புகார் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை.

5) இந்த வழக்கில் எனது கணவர் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். எதிரிக்கும் அ.சா.3க்கும் வீட்டு சுவர் பூசுவது சம்பந்தமாக பிரச்சனை ஏதும் உள்ளதா என்றால் ஆமாம். அந்த பிரச்சனை எவ்வளவு நாளாக உள்ளது என்றால் 3 வருடமாக உள்ளது. இரத்த காயம் ஏதும் இல்லை என்றால் வீக்க காயம் இருந்தது. மருத்துமனைக்கு யார் என்னை அழைத்து சென்றார்கள் என்றால் யாரும் சம்பவ இடத்தில் இல்லாததால் நான் மற்றும் அ.சா.2 அ.சா.3 நாங்கள் இருவரும் மருத்துவமனைக்கு சென்றோம். என்னுடம் அலமேலு வந்தாரா என்றால் ஆமாம்.

6) எதிரிகளும், நாங்களும் உறவினர்களா என்றால் ஆமாம். எங்கள் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் நிலச்சம்பந்தமாக பிரச்சனை

உள்ளதா என்றால் ஆமாம். இதற்கு முன்பாக எதிரிகள் மீது புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். போலிசார் என்னை தனிப்பட்ட முறையில் விசாரித்தனரா என்றால் மருத்துவமனையில் விசாரித்தார்கள், அதற்கு பின்பு விசாரிக்கவில்லை. எதிரிகள் திட்டியதாக சொல்லப்படும் போது நான் என் வீட்டில் இருந்தேன். எனது வீட்டு வாசலில் சம்பவம் நடந்தது. சம்பவம் நடைபெறும் போது அங்கு யாரும் இல்லை என்றால் ஆமாம். மருத்துவமனைக்கு நான் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் சம்பவம் ஒரு மணி நேரம் நடந்தது அதன் பிறகு மயக்கத்தில் இருந்ததால் தெரியவில்லை. மருத்துவர் யாரும் என்னை விசாரிக்கவில்லை என்றால் இல்லை.

7) மருத்துவ குறிப்பேட்டில் ஒருவர் மட்டும் அடித்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அதன் பிறகு எதிரிகள் எங்கள் மீது புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் மற்றும் என் மகன் மற்றும் 4 பேர் மீது 2ம் எதிரி புகார் கொடுத்து அந்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் வீடியோ பதிவுகளில் உள்ள எதிரிகள் தடுப்பதாக காட்டப்படுகிறது என்றால் மருத்துவமனைக்கு போகும் போது தடுக்கப்படுவதாக உள்ளது என்றால் அது ஒருதலைப்பட்சமாக எடுக்கப்பட்டது.

8) வீடியோவில் நான் தான் எதிரிகளை அடித்துவிட்டு அவர்கள் சிகிச்சை பெறுவதற்கு மருத்துவமனைக்கு செல்வதற்கு கூட விடாமல் தடையாக உள்ளேன் என்றால் இல்லை. சம்பவம் தொடர்பாக வீடியோ ஆதாரம் எதிரிகளிடம் உள்ளது. எதிரிகள் சொல்வது போல் சொல்லும் விதத்தில் சொல்லும் நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை நான் மற்றும் அ.சா.2 மற்றும் 5 பேர் சேர்ந்து அடித்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9) நான் சொல்லும் சம்பவம் பொய் என்பதால் தான் போலிசார் விசாரணையில் மற்றும் முதல் விசாரணையில் மாறி மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. என்னை மருத்துவமனையில் போலிசார் வாக்குமூலம் வாங்கிய பின்னிட்டு வழக்கு விசாரணை அதிகாரி யாரும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் கட்டையால் அடித்திருந்தால் நான் சொல்வது போல் காயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. அதிகப்படியான இரத்தகாயம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அடித்தார்கள். நான் தன்னிச்சையாக காயம் ஏற்படுத்திக்கொண்டு எதிரிகள் கொடுத்த புகாரிலிருந்து தப்பித்து கொள்வதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10) எதிரிகள் மருத்துவமனைக்குசெல்லும் போது எத்தனை பேர் தடுத்திருப்பார்கள் என்றால் 5 மற்றும் 6 பேர் தடுத்திருக்கலாம். என்னுடைய மகன் அ.சா.10 சிவசண்முகம் எங்கு குடியிருக்கிறார் என்றால் செங்காட்டுரில் குடியிருக்கிறார். நீதிமன்றத்தில் என் சார்பாக சாட்சியம் அளித்த அனைவரும் எனது உறவினர்கள் என்றால் ஆமாம். என்னை அடித்தவுடன் மயக்கம் அடைந்த பின்னிட்டு என்ன நடந்தது எனக்கு தெரியாது என்றால் சற்று சுயநினைவுடன் தான் இருந்தேன். எத்தனை மணிக்கு மயக்கம் அடைந்தேன் என்றால் 10 மணிக்கு மேல் மயக்கம் அடைந்தேன். என்னை அடித்தபோது நான் மயக்கம் அடைந்த நிலையில் தான் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் இல்லை.

11) நான் சொல்லும் புகாரில் போலிசார் எழுதவில்லை என்றால் ஆமாம். எந்த போலிசார் விசாரித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் எந்த காயம் ஏற்படததால் தான் நல்ல நிலையில் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் அ.சா.2 நல்ல முறையில் மருத்துவமனையில் சேர்ந்தோம் என்றால் ஆமாம். அடி அதிகமாக இருந்திருந்தால் பக்கத்தில் உள்ள நபர்கள் மருத்துவமனையில் சேர்ந்திருப்பார்கள் என்றால் நாங்களாகவே சேர்ந்தோம்.

12) எதிரிகள் என்னை கெட்ட வார்த்தையால் திட்டியதாக சொல்லியது பொய் என்றால் சரியல்ல. அ.சா.2 செல்வராஜை, குணசீலன், செந்தில்குமார்,

இளங்கோ, சரஸ்வதி, செல்வி கட்டையால் அடித்தாக சொல்லியது பொய் என்றால் சரியல்ல. கட்டையை காவல் துறையினரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். இந்த சம்பவம் 8 மணிக்கு 15.09.2022ம் தேதி சண்டை நடந்தது என்றால் இருக்கலாம். நான் தான் செந்தில்குமாரை கெட்ட வார்த்தையால் திட்டினேன் என்றால் இல்லை. நான் மற்றும் செல்வராஜ் மற்றும் 5 பேர் சேர்ந்து எதிரிகளை அடித்தீர்கள் என்றால் சரியல்ல. சொல்வது போல் 9 சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

13) ஒரு மணி நேரம் சம்பவம் நடந்திருந்தால் இரவு 11 மணிக்கு மேல் தான் மருத்துவமனைக்கு சேர்ந்திருக்க முடியும் என்றால் அவ்வாறு இல்லை. நான் சொல்வது போல் சண்டை ஏதும் நடக்காமல் எதிரிகளை பழி வாங்கவேண்டும் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை நாங்கள் அடித்ததை வீடியோ ஆதாரம் வாயிலாக நிரூபிக்க தயாராக உள்ளார்கள் என்றால் சரியல்ல. குமரவேல் பாட்டாளி மக்கள் கட்சி பொறுப்பில் உள்ளாரா என்றால் உள்ளார். மற்ற சாட்சிகள் கேள்வி பட்டதாகத்தான் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் அவ்வாறு இல்லை. அரசு செல்வாக்கை பயன்படுத்தி 18.09.2022ம் தேதி மறு வாக்குமூலம் எதிரிகளுக்கு எதிராக தவறாக பெற்றிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. காவல் துறையினர் பாதிக்கப்பட்ட எதிரிகளுக்கு ஆதரவாக செயல்படாமல் உங்களுக்கு ஆதாரவாக செயல்பட்டு இருப்பார்கள் என்றால் சரியல்ல.

14) கட்டை என்ன வடிவம், என்ன வகையான கட்டை என்றால் எனக்கு தெரியாது. கட்டையால் அடித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பொதுமக்கள் நிறைய பேர் இருந்தார்கள் என்றால் ஆமாம். சம்பவம் நடைபெறததால் தான் பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்கவரவில்லை என்றால் சரியல்ல.

15) எதிரிகள் கொடுத்த புகாரின் பேரில் அ.சா.1 மற்றும் 5 பேர்கள் மீது மேச்சேரி காவல் நிலையம் குற்ற எண்.454/2022 ல் பிரிவு 147, 294(பி), 323, 324, 341, 506(1) வழக்கில் பதிவு செய்யப்பட்டு வழக்கு தற்போது நீதிமன்ற விசாரணை

நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி எதிரிகள் கொடுத்த வழக்கிலிருந்து தப்பித்து கொள்வதற்காக எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.3 குமரவேல் குடும்பத்தாருக்கும் மற்றும் உங்கள் குடும்பத்தில் உள்ள நிலப்பிரச்சனை முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு கூட்டு சேர்த்து எதிரிகள் மீது பொய்புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/— தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 444/2023**

**Prosecution witness : அ.சா.2** **Date : 14.11.2025.**

| | |
|---|---|
| **Name : செல்வராஜ்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சொறையூரில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்கிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 என் அம்மா. கடந்த 15.09.2022 ம் தேதி இரவு 9 மணியளவில் ஆஜர் எதிரிகள் நால்வரும் என் தாயாரை அடித்து கொண்டிருந்தார்கள். இளங்கோ கட்டையால் அடித்து கொண்டிருந்தார். நான் அவர்களிடம் சென்று ஏன் இவ்வாறு அடிக்கிறீர்கள் என்று கேட்டேன். அப்போது ஆஜர் எதிரிகளுடன் சரஸ்வதி செல்வி மணிமுத்து ஆகியோர் சேர்ந்து என் குரல் வலையை நசுக்கினர்.

2) குணசீலன், செந்தில்குமார் கட்டையால் என் கழுத்தில் அடித்தனர். பக்கத்து வீட்டை சேர்ந்த குமரவேல் எங்களை காப்பாற்றி தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார். எதிரிகள் நால்வரும் மது போதையில் இருந்தார்கள். கெட்ட வார்த்தையால் கண்டார ஒலி என்று எதிரிகள் நால்வரும் பேசினார்கள். பிறகு கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டல் விடுத்தனர். ஆஜர் எதிரிகள் தான் அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—**

3) நான் போலிசார் விசாரணையில் சொன்னதுபோல் முதல் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். நான் சம்பவ சமயத்தில் வீட்டில் தான் இருந்தேன். எனக்கு எதிரிகள் குடும்பத்தாருக்கும் நிலம் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். அ.சா3 குமரவேல் வீட்டை பூசியது சம்பந்தமாகபிரச்சனை இருந்ததது என்றால் சரிதான்.

4). சம்பவ சமயத்தில் நான் வீட்டில் இருந்தேன் என்றால் சம்பவ இடத்தில் இருந்தேன். அ.சா1 அடித்த போது வீட்டில் தான் அடித்தார்கள் என்றால் ஆமாம். எதிரிகள் மது போதையில் இருந்ததாக சொல்வது பொய் என்றால் ஒரு நபர் மது போதையில் இருந்தார். மற்றவர்கள் சுயநினைவுடன் இருந்தார்கள். நான் அனைவரும் மது போதையில் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் ஒர் நபர் மது போதையில் இருந்தார்.

5). என்னை யாரும் சண்டை நடப்பதாக சொல்லி அழைக்கவில்லை என்றால் சரிதான். இரவு 9 மணிக்கு மேல் தான் நடந்ததது என்றால் சரிதான். எவ்வளவு நேரம் சம்பவம் நடந்ததது என்றால் அரை மணி நேரம் நடந்ததது. நான் தனிபட்ட முறையில் மருத்துவமனை சென்றேனா என்றால் அம்புலன்ஸ் முலமாக சென்றேன். சம்பவ நடந்து பாதிக்கபட்டிருந்தால் சம்பவ இடத்தில் வேறு யாராவது இருந்திருந்தால் என்னை அவர்கள் மருத்துவமனையில் சேர்த்திருப்பார்கள் என்றால் அம்புலன்ஸ் முலமாக சென்றோம்.

6). மருத்துவமனையில் தனிபட்ட முறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் கொடுத்தேன். எனது அம்மா எனது உறவினர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். சம்பவ சமயத்தில் 30 பேர் இருந்திருப்பார்கள் என்றால் ஆமாம். எனது உடன்பிறந்த சகோதாரர் சிவசண்முகம் செங்காட்டில் குடியிருக்கிறார். சம்பவத்தில் யாருக்கும் இரத்த காயம் இல்லை என்றால் ஆமாம். உள்அடி தான் பட்டது.

7). எதிரிகள் நான்கு பேரும் அ.சா1 யை அடித்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. இளங்கோ கட்டையால் அடித்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. கட்டையால் தாக்கியருந்தால் வெளிபுற காயம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. குணசீலன் செந்தில்குமார் கழுத்தில் அடித்தாக சொல்வது போல் நடத்திருந்தால் இரத்த காயம் ஏற்பட்டிருக்கும் என்றால் அவ்வாறு இல்லை.

8). நான் வழக்கிறக்காக உள்காயம் ஏற்பட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது செல்வாக்கை பயன்படுத்தி மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்தோம் என்றால் சரியல்ல. உள்காயம் நான் தன்னிச்சை யாக ஏற்படுத்தி கொண்டது என்றால் சரியல்ல. எதிரிகள் கெட்டவார்த்தையால் பேசியாதாக சொல்வது மற்றும் கொலை மிரட்டல் விடுத்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

9). சம்பவம் நடந்த பிறகு மருத்துவமனைக்கு சிகச்சைக்கு எப்போது சேர்ந்தோம் என்றால் இரவு 11 மணிக்கு சோந்த்தோம். சம்பவம் நடந்த இடத்தில் இருந்து மருத்துவமனைக்கு 16 கிமீ இருக்கும். 30 கிமீ மேல் இருக்கும் என்றால் சரியல்ல. போலிசாருக்கு எப்போது தகவல் கொடுத்தோம் என்றால் உடனடியாக கொடுத்தோம். எவ்வளவு நேரம் போலிசார் வந்தார்கள் என்றால் 10 நிமிடத்தில் வந்தார்கள். இரவு 9.15 மணிக்கு சம்பவம் நடந்ததாக புகாரில் சொல்லியுள்ள நிலையில் சம்பவம் முக்கால் மணி நேரம் நடந்ததாக சொல்லியுள் நிலையில் சம்பவம் முடிந்து அம்புலன்ஸ வருவதற்கு 10 நிமிடம் ஏற்பட்டிருக்க நிலையில் நான் சொல்வது போல் இரவு 10 மணிக்கு சிகச்சை பெற்றிருக்க முடியாது என்றால் சரியல்ல.

10). எதிரிகள் எங்கள் மீது 15.09.2022ம் தேதியன்று இரவு 8 மணிக்கு புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். என்னை அடித்து விட்டதாக மருத்துவமனையில் சேர்ந்தார்கள் என்றால் அது பொய்யானதாகும். எதிரிகள் ஓமலூர் மருத்துவமனையில் இரவு 10 மணிக்கு 2ம் எதிரி நான் அடித்து விட்டதாக சேர்ந்தார் என்றால் பொய்யாக சேர்ந்துள்ளார்கள்.இரவு 8 மணிக்கு நான் எதிரிகளை தாக்கியது தான் உண்மையான சம்பவம் என்றால் சரியல்ல.

11). அதன் காரணமாக தான் நாங்கள் எதிரிகள் கொடுத்த புகாரில் இருந்து தப்பிக்க வேண்டி பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. இரவு 8 மணிக்கு சம்பவம் நடந்ததால் தான் எதிரிகள் மருத்துவமனைக்கு 10 மணிக்கு உண்மையாக சேர்ந்தார்கள் என்றால் சரியல்ல. அ.சா1 எனக்கும் வெளிபுற காயம் இல்லை என மருத்துவர்கள் சொல்லியுள்ளார்கள் என்றால் உள்காயம் ஏற்பட்டது. என்னிடம் காட்டபடும் வீடியோவில் நான் எதிரிகளை மருத்துவமனை செல்ல விடாமல் தடுத்தாக உள்ளது என்றால் அது ஒருதலைபட்சமானது ஆகும். சாட்சியிடம் வீடியோவில் பதிவில் நான் மற்றும் அ.சா1 உள்ளோம் என்றால் ஆமாம். நான் பாதிக்கபட்ட நபர் ஆவேன்.

12). இந்த வீடியோ ஆதாரத்தில் வாயலிாக எதிரிகளை தாக்கியதற்கு ஆதரவாக உள்ளது என்றால் சரியல்ல. இந்த வீடியோ ஆதாரத்தை ஏற்கமாட்டோம். 17.09.2022ம் தேதியன்று எனது தரப்பு சாட்சிகளிடம் அனைவரும் கேள்வி பட்டதாக பதிவு செய்து கொண்டார்கள் என்றும் அதன் பிறகு எங்களது செல்வாக்கின் பேரில் அழுத்ததின் பேரில் 15.09.2022ம் தேதியன்று மீண்டும் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக மறுவாக்குமுலம் பதிவு செய்து என் மீது போடபட்ட வழக்கில் சட்டபிரிவுகள் எங்களுக்கு ஆதரவாக பதிவு செய்யபட்டது என்றால் அவ்வாறு இல்லை. நாங்கள் பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்தவர் என்றால் ஆமாம். நாங்கள் அரசியல் செல்வாக்கு காரணமாக பொய்யாக இந்த வழக்கு எதிரிகள் மீது போடபட்டுள்ளது என்றால் சரியல்ல்.

என்றால் சரியல்ல.

13) எதிரிகள் கொடுத்த புகாரின் பேரில் அ.சா.1 மற்றும் 5 பேர்கள் மீது மேச்சேரி காவல் நிலையம் குற்ற எண்.454/2022 ல் பிரிவு 147, 294(பி), 323, 324, 341, 506(1) வழக்கில் பதிவு செய்யப்பட்டு வழக்கு தற்போது நீதிமன்ற விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி எதிரிகள் கொடுத்த வழக்கிலிருந்து தப்பித்து கொள்வதற்காக எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.3 குமரவேல்

குடும்பத்தாருக்கும் மற்றும் உங்கள் குடும்பத்தில் உள்ள நிலப்பிரச்சனை முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு கூட்டு சேர்த்து எதிரிகள் மீது பொய்புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அசா1 அ.சா2 எங்களை தாக்கிய கட்டையின் வடிவம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. போலிசாரி விசாரணையில் எதையும் நாங்கள் கட்டையை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். கட்டை சம்பவ சமயத்தில் பயன்படுத்த வில்லை என்பதால் தான் அதனை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 444/2023**

**Prosecution witness : அ.சா.3** **Date : 14.11.2025.**

| | |
|---|---|
| **Name : குமரவேல்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சொறையூரில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்கிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 என் ஊரைச் சேர்ந்தவர். இரு தரப்பினரும் உறவினர்கள் ஆவார்கள். கடந்த 15.09.2022 ம் தேதி இரவு 9 மணியளவில் நான் மேச்சேரியிலிருந்து வந்து கொண்டிருந்தேன். அப்போது குணசீலன் மற்றும் செல்வராஜ் ஆகியோரின் வீட்டின் அருகில் ஆஜர் எதிரிகள் நால்வரும் சின்னதாயி மற்றும் செல்வராஜை அடித்துக் கொண்டிருந்தனர். கையில் கட்டையை வைத்திருந்தார்கள். நான் அவர்களை விலக்கலாம் என்று சென்றேன். அப்போது சின்னதாயி என்பவரை தலையில் அடித்துவிட்டனர்.

2) சின்னதாயி மயங்கி கீழே விழுந்துவிட்டார். அப்போது செல்வராஜ் அங்கு வந்தார். அவரை எதிரிகள் அடித்தார்கள். மணிமுத்து, செல்வம், செல்வி அனைவரும் உடன் இருந்தனர். அப்போது குமரவேல் அருகில் வந்துவிட்டார். 108 ஆம்புலன்சிற்கு குமரவேல் தகவல் சொன்னார். தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சின்னதாயி, செல்வராஜ் ஆகியோர்களை மருத்துவமனையில் சேர்த்தனர். அடிக்கும் போது கண்டார ஒலி தெவிடியா பையா ஆயா அம்மா என்று பேசினார்கள். பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள்.

3) என்னையும் எதிரிகள் அடிக்க வந்தனர். அவர்களை பார்த்து நான் நீங்கள் இங்கிருந்து போடா என்றும் ஏன் சண்டை செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றும் கூறினேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

4). நான் போலிசார் விசாரணையில் சொன்னதுபோல் முதல் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். எனக்கு எதிரிகள் குடும்பத்தாருக்கும் நிலம் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வீட்டை பூசியது சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான்.

4). நான் குடியிருக்கும் வீட்டிற்கு சம்பவ இடத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 200 அடி தூரம் இருக்கும். நான் சம்பவ சமயத்தல் வேலைக்கு சென்றிருந்தேனா என்றால் சம்பவ இடத்தில் இருந்தேன். சண்டை ஆரம்பிக்கும் போது நான் அங்கு இல்லை என்றால் இருந்தோம். சண்டை நடக்கும் போது எவ்வளவு பேர் இருந்தோம் என்றால் நான் செல்வராஜ் பேசிகொண்டு இருந்தோம். எதிரிகள் மது போதையில் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

5). இரவு 9.45 மணி வரை சம்பவம் நடந்தது. சண்டை முடிந்தவுடன் 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொன்னோம். 108 ஆம்புலன்சிற்காக 10 நிமிடம் காத்திருந்தோம். ஆம்புலன்சு வண்டி வரவில்லை. அதன் பிறகு தனியார் ஆம்புலன்சிற்கு தகவல் சொன்னேன். 5 நிமிடத்தில் ஆம்புலன்ஸ் வந்தது. அதன் பிறகு மேச்சேரி அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள்.

6) அ.சா.1 மற்றும் அ.சா.2 மட்டும் தான் மருத்துவமனைக்கு சென்றார்கள். நான் செல்லவில்லை. மேச்சேரியிலிருந்து மேட்டூருக்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 15 கிலோமீட்டர் தூரம் இருக்கும். நான் சொல்வது பொய் என்றும் 25 கிலோமீட்டர் தூரம் என்றால் சரியல்ல. ஆம்புலன்சில் வந்தால் 1 /2 மணி நேரத்தில் வரலாம். நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில், சொல்லும் விதத்தில் சம்பவம் நடந்திருந்தால் இரவு 11 மணிக்கு மேல் தான்

மருத்துவமனைக்கு அ.சா.1, 2 சென்றிருக்க முடியும் நான் சொல்லும் நேரத்தில் சொன்ன சம்பவம் போன்று ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

7) எதிரிகள் அ.சா.1 மற்றும் என்னையும் சேர்த்து மொத்தம் 6 பேர் மீது அவர்களை நான் அடித்துவிட்டதாக என் மீது ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மேச்சேரி போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விவரம் தெரியும். 15.09.2022 ம் தேதி இரவு 8 மணிக்கு நான் அடித்துவிட்டதாக என் மீது கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். சம்பவம் 8 மணிக்கு நாங்கள் தாக்கிய சம்பவம் தான் உண்மையான சம்பவம் என்றால் சரியல்ல. எதிரிகள் என் மீது கொடுத்த புகாரிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக தான் அ.சா.1 எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்பதால் தான் நீதிமன்ற முதல் விசாரணையிலும் சம்பவ சமயத்தில் மேச்சேரியிலிருந்து வந்து கொண்டிருந்ததாகவும், குறுக்கு விசாரணையில் ரோட்டில் நின்று கொண்டு செல்வத்துடன் பேசிக் கொண்டிருப்பதாக முன்னுக்குப்பின் முரணாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னவாறு குணசீலன், செல்வராஜ் ஆகியோரின் வீட்டின் அருகில் ஆஜர் எதிரிகள் நால்வரும் சின்னதாயி மற்றும் செல்வராஜை அடித்து கொண்டிருந்தனர் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. நான் குறுக்கு விசாரணையில் சம்பவத்தின் போது செல்வராஜ் உடன் ரோட்டில் பேசிக் கொண்டிருந்ததாக சொல்லிவிட்டு முதல் விசாரணையில் சின்னதாயி மற்றும் செல்வராஜை அடித்து கொண்டிருக்கும் போது சம்பவத்தை பார்த்ததாக முன்னுக்குப்பின் முரணாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்பதால் தான் போலீசார் விசாரணையில் ஒரு மாதிரியும், நீதிமன்ற முதல் விசாரணையில் ஒரு மாதிரியும்,

குறுக்கு விசாரணையில் ஒரு மாதிரியும் மாற்றி மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் கெட்ட வார்த்தையால் பேசியதாகவோ, கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டியதாக சொல்வது அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. நான் எதிரிகள் மீது புகார் அளிக்கவில்லை என்றால் ஆமாம். எதிரிகள் அடிக்க வந்திருந்தால் காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல.மருத்துவமனைக்கு புகார் வாக்குமூலம் யாரிடம் பெற்றனர் என்ற விவரம் எனக்கு தெரியாது.

10. அ.சா.1, 2 மருத்துவமனைக்கு சென்ற போது சம்பவம் சம்மந்தமாக புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவம் உண்மையாக இருந்திருந்தால் போலீசார் என்னை விசாரித்திருப்பார்கள் என்றும் சம்பவம் உண்மையல்ல என்றால் சரியல்ல.

11. அ.சா.1 ரத்த காயம் ஏற்பட்டதா என்றால் மண்டையில் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. நான் சொல்வது பொய் என்றும் அ.சா.1 நீதிமன்ற விசாரணையில் ரத்த காயம் இல்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. சம்பவத்தை பார்க்காததால், தெரியாததால் தான் ரத்த காயம் உள்ளதாக சொல்கிறேன் என்றால் சரயில்ல. சம்பவத்தில் எதிரிகள் பாதிக்கப்பட்ட பிறகு மருத்துவமனைக்கு செல்லும் போது அ.சா.1 மற்றும் நானும் என் வகையறாக்கள் சேர்ந்து அ.சா.2 மற்றும் கந்தாயி என்பவரை மருத்துவமனைக்கு செல்லவிடாமல் தடுத்து நிறுத்தி தகராறு செய்து வீடியோ ஆதாரம் எதிரிகளிடம் உள்ளது என்றால் பொய்யான ஆதாரமாகும்.

12. எதிரிகள் கையில் வைத்திருந்ததாக சொல்லப்படும் கட்டையை நான் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் ஆமாம். சம்பவத்தில் உண்மையில் எதிரிகள் கட்டையை பயன்படுத்தியிருந்தால் கட்டையை ஒப்படைத்திருப்பேன் என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் 30 பேர் இருந்திருப்பார்கள். சாட்சிகள் உறவினர்கள் என்றால் ஆமாம்.

13. சம்பவ சமயத்தில் நான் சொல்வது போல் 30 பேர் இருந்திருந்தால் அவர்களும் சாட்சியம் அளித்திருப்பார்கள். நான் சொன்னவாறு சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறாததால் தான் பொது மக்கள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும் நாங்கள் அனைவரும் ஆர்வமுள்ள சாட்சிகள் என்றால் சரியல்ல.

14) எதிரிகள் கொடுத்த புகாரின் பேரில் அ.சா.1 மற்றும் 5 பேர்கள் மீது மேச்சேரி காவல் நிலையம் குற்ற எண்.454/2022 ல் பிரிவு 147, 294(பி), 323, 324, 341, 506(1) வழக்கில் பதிவு செய்யப்பட்டு வழக்கு தற்போது நீதிமன்ற விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி எதிரிகள் கொடுத்த வழக்கிலிருந்து தப்பித்து கொள்வதற்காக எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வீரசிங் மகன் குமரவேல் குடும்பத்தாருக்கும் மற்றும் உங்கள் குடும்பத்தில் உள்ள நிலப்பிரச்சனை முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு கூட்டு சேர்த்து எதிரிகள் மீது பொய்புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஓம்/– தே.மயில்சாமி**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 444/2023**

**Prosecution witness : அ.சா.4** **Date : 14.11.2025.**

| | |
|---|---|
| **Name : தனசேகர்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சொறையூரில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்கிறேன். இரு தரப்பினரும் பக்கத்து வீட்டை சேர்ந்தவரகள். 15.09.2022 ம் தேதி இரவு 9 மணியிலிருந்து 9.30 மணியளவில் எதிரிகள் மது போதையில் அசிங்கமான வார்த்தையால் சின்னதாயியை பார்த்து பேசினார்கள். கட்டையாலும், கையாலும் அடித்தனர். அப்போது செல்வம் அங்கே வந்தார். அவரை ஆஜர் எதிரிகள் கட்டையாலும், கையாலும் அடித்தனர். ஆம்புலன்ஸ் மூலம் அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2) என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். என் வீட்டிற்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 அடி இருக்கும். நான் மருத்துமனைக்கு யாரையும் அழைத்து செல்லவில்லை என்றால் ஆமாம். அ.சா.1 எனது உறவினர்கள் என்றால் ஆமாம். யார் என்னை அழைத்து வந்தார் என்றால் அ.சா.1 அழைத்து வந்தார். சம்பவம் சமயத்தில் நான் எங்கிருந்தேன் என்றால் வீட்டில் இருந்தேன். எதிரிகள் அ.சா.1 மற்றும் 5 பேர் கொடுத்த புகார் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 மற்றும் 5 பேர் சேர்ந்து அடித்துவிட்டதாக 15.09.2022ம் தேதி காலை 10 மணிக்கு 2ம் எதிரி ஓமலூர்

அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அ.சா.1 மற்றும் 5 பேர் மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். அ.சா.1 குடும்பத்தார் உறவினர் என்பதால் எதிரிகள் கொடுத்த புகாரிலிருந்து தப்பித்து கொள்வதற்காக அ.சா.1 புகாரருக்கு ஆதராவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 யை அடித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 444/2023**

**Prosecution witness : அ.சா.5** **Date : 14.11.2025.**

| | |
|---|---|
| **Name : ராஜகோபால்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சொறையூரில் குடியிருந்து விவசாய வேலை செய்கிறேன். இரு தரப்பினரும் பக்கத்து வீட்டை சேர்ந்தவரகள். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 சின்னதாயி பக்கத்து வீட்டை சேர்ந்தவர். கடந்த 15.09.2022 ம் தேதி இரவு 9 மணியளவில் கட்டையாலும், கையாலும் இடுப்பிலும், தலையிலும் அடித்தார்கள். அவரை ஆஜர் எதிரிகள் கட்டையாலும், கையாலும் அடித்தனர். அப்போது மது போதையில் இருந்தார்கள். ஆம்புலன்ஸ் மூலம் அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2) நான் போலிசார் விசாரிக்கும்போது முதல் விசாரணையில் சொன்னவற்றைத்தான் சொன்னேன் என்றால் ஆமாம். அ.சா.1 உறவினர்கள் என்றால் ஆமாம். என் வீடு சம்பவம் நடந்த இடத்திலிருந்து 30 அடி இருக்கும். சம்பவம் சமயத்தில் நான் எங்கிருந்தேன் என்றால் வெளியே இருந்தேன் என்றால் ஆமாம். எதிரிகள் குணசீலன், அ.சா.1 5 பேர் அடித்துவிட்டதாக மருத்துவமனையில் சேர்ந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரிகள் கொடுத்த புகாரின் பேரில் நீதிமன்றத்தில் வழக்கு நடப்பது தெரியுமா என்றால் தெரியும். எதரிகள் அ.சா. 1 மற்றும் 5 பேர் மீது கொடுத்த புகாரிலிருந்து தப்பித்து கொள்வதற்காக அ.சா.1 கொடுத்த பொய் புகாரின் பேரில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) எதிரிகள் கைகளாலும், கட்டைகளாலும் அடித்ததாக சொல்லியது பொய் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு அடிப்பட்டவர்களை அழைத்து செல்லவில்லை என்றால் ஆமாம். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். அ.சா.1 அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். எதிரிக்கும் எனக்கும்  பேச்சு வார்த்தை இல்லை என்றால் ஆமாம். எதிரிக்கும் எனக்கும் உள்ள முன்விரோதம் காரணமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் மது போதையில் இருந்திருந்தால் மருத்துவமனை சிகிச்சையில் தெரிந்திருக்கும் என்றால் மது போதையில் இருந்தார்கள்.

மறு விசாரணை இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 444/2023**

**Prosecution witness : அ.சா.6** **Date : 14.11.2025.**

| | |
|---|---|
| **Name : சாந்தி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சொறையூரில் குடியிருந்து வருகிறேன். இரு தரப்பினரும் பக்கத்து வீட்டை சேர்ந்தவரகள். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 சின்னதாயி பக்கத்து வீட்டை சேர்ந்தவர். கடந்த 15.09.2022 ம் தேதி இரவு 9 மணியளவில் எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 யை கட்டையாலும், கையாலும் தலையிலும் அடித்தார்கள். அவரை ஆஜர் எதிரிகள் கட்டையாலும், கையாலும் அடித்தனர். ஆம்புலன்ஸ் மூலம் அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2) போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. அ.சா.1 நீதிமன்றம் அழைத்ததால் தற்போது நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன். அ.சா.1 என் உறவினர் என்றால் ஆமாம். எதிரிகள் அ.சா.1 மற்றும் 5 பேர் மீது வழக்கு போட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரிகள் கொடுத்த வழக்கில் 4 ம் எதிரி குமரவேல் என் மருமகன் ஆவார். எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.5 பேர் மீது வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரிகள் அ.சா.1 மற்றும் 5 பேர் கொடுத்த புகாரிலிருந்து தப்பித்து கொள்வதற்காகத்தான் அ.சா.1 மற்றும் அ.சா.2 புகாரிலிருந்து தப்பித்து

கொள்வதற்காக அ.சா.1 மற்றும் அ.சா.2 கொடுத்த பொய் புகாருக்கு ஆதராவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்லிய விவரம் எதையும் போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 444/2023**

**Prosecution witness : அ.சா.7** **Date : 14.11.2025.**

| | |
|---|---|
| **Name : பத்மினி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மேச்சேரியில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். இரு தரப்பினரும் பக்கத்து வீட்டை சேர்ந்தவரகள். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 சின்னதாயி பக்கத்து வீட்டை சேர்ந்தவர். கடந்த 15.09.2022 ம் தேதி இரவு 9 மணியளவில் ஆஜர் எதிரிகள் கட்டையாலும், கையாலும் அ.சா.1 ன் தலையில் அடித்தனர். எதிரிகள் கெட்ட வார்த்தையால் அளவு கடந்து பேசினார்கள். ஆம்புலன்ஸ் மூலம் அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2) நீதிமன்ற முதல் விசாரணையில் சொன்னவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். கேள்விப்பட்டு தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். எதிரிகள் அ.சா.1 குடும்பத்தார் அடித்ததன் காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. குணசீலன் மருத்துவமனைக்கு சிகிச்சை பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

3) எதிரிகள் அ.சா.1 குடும்பத்தார் மீது புகார் கொடுத்து எதிரிகள் காவல் நிலையத்தில் பிணையில் வந்த விவரம் தெரியும். எதிரிகள் அ.சா.1 மற்றும் 5 பேர்

மீது புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அந்த சட்ட நடவடிக்கையில் இருந்து தப்பித்து கொள்வதற்காக தான் அ.சா.1 கொடுத்த பொய் புகாரின் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/— தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 444/2023**

**Prosecution witness : அ.சா.8** **Date : 14.11.2025.**

| | |
|---|---|
| **Name : அலமேலு** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சொறையனூரில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். இரு தரப்பினரும் பக்கத்து வீட்டை சேர்ந்தவரகள். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 சின்னதாயி பக்கத்து வீட்டை சேர்ந்தவர். கடந்த 2022 ம் வருடம் இரவு 9 மணியளவில் எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 யை கட்டையாலும், கையாலும் தலையிலும் அடித்தார்கள். ஆம்புலன்ஸ் மூலம் அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2) முதல் விசாரணையில் சொன்னவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அ.சா.1 அ.சா.2 கொழுந்தனார் மனைவி மற்றும் மகன் ஆவார். சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் ஆமாம். எதிரிகள் இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் 5 பேர் மீது கொடுத்த புகார் விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரிகள் அ.சா.1 மற்றும் 5 பேர் மீது கொடுத்த புகாரிலிருந்து தப்பிக்க வேண்டி அ.சா.1 எதிரிகள் மீது பொய் புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 444/2023**

**Prosecution witness : அ.சா.9** **Date : 14.11.2025.**

| | |
|---|---|
| **Name : பழனிசாமி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சொறையனூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். இரு தரப்பினரும் பக்கத்து வீட்டை சேர்ந்தவரகள். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 சின்னதாயி பக்கத்து வீட்டை சேர்ந்தவர். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பாக இரவு 9 மணியளவில் எதிரிகள் அ.சா.1 சத்தம் போட்டார்கள். பிறகு அ.சா.1 மற்றும் அ.சா.2 யை கட்டையாலும், கையாலும் தலையிலும் அடித்ததாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2) சம்பவயிடத்திற்கும் என் வீட்டிற்கும் 200 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் ஆமாம். அ.சா.1 மற்றும் செல்வராஜ் எனக்கு என்ன உறவு என்றால் பங்காளி உறவாகும். எவ்வளவு நேரம் கழித்து சம்பவயிடம் சென்றேன் என்றால் 1 மணி நேரம் கழித்து சென்றேன். நீதிமன்றத்தில் சொன்னவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம்.

3) எதிரிகள் அ.சா.1 மற்றும் 5 பேர் மீது கொடுத்த புகார் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சம்பவயிடத்தில் இருந்த போது சம்பவயிடத்தில் யாரும் இல்லை. அதனால் சண்டையை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 444/2023**

**Prosecution witness : அ.சா.10** **Date : 14.11.2025.**

| | |
|---|---|
| **Name : சிவசண்முகம்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் சொறையனூரில் குடியிருந்து டெய்லராக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 சின்னதாயி பக்கத்து வீட்டை சேர்ந்தவர். கடந்த 15.09.2022 ம் தேதி இரவு 9 மணியளவில் எதிரிகள் மற்றும் அ.சா.1 சத்தம் போட்டார்கள். பிறகு அ.சா.1 மற்றும் அ.சா.2 யை கட்டையாலும், கையாலும் தலையிலும் அடித்ததாக சொன்னார்கள். பிறகு காயம்பட்ட அ .சா.1, 2 ஆகியோரை ஆம்புலன்ஸ் மூலமாக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று உள்நோயாளியாக சேர்த்தார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2) சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் ஆமாம். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம். யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றது என்று எனக்கு தெரியாது. அ.சா.1 என் அம்மா. அ.சா.2 உடன் பிறந்த சகோதரர். எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2, கௌரி, குமரவேல், கலைவாணி, குமார் ஆகியோர்கள் மீது 2ம் எதிரி குணசீலன் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். எதிரிகள் அ.சா.1 மீது கொடுத்த புகாரில் அ.சா.1 முதல் 5 பேர் பிணையில் வந்த விவரம் தெரியும்.

3) எதிரி கொடுத்த புகாரில் அ.சா.1 முதல் அ.சா.5 பேர் நீதிமன்ற விசாரணைக்கு வரும் விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் சம்பவ சமயத்தில் செங்காட்டூர் செலக்கல்திட்டு என்ற இடத்தில் குடியிருந்தேன். அ.சா.1ன் அம்மா வீட்டிற்கும் செலக்கல்திட்டிற்கும் சுமார் 1 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் மேச்சேரியில் டெய்லர் கடை நடத்தி வருகிறேன். கடை எவ்வளவு நேரம் நடத்துவேன் என்றால் இரவு 8, 9 மணி வரை நடத்துவேன்.

4) எதிரிகள் அ.சா.1 மற்றும் 5 பேர்கள் மீது கொடுத்த புகாரிலிருந்து தப்பித்து கொள்வதற்காக அ.சா.1 எதிரிகள் மீது கொடுத்த பொய் புகாரின் பேரில் புகார்தாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 444/2023**

**Prosecution witness : அ.சா.11** **Date : 14.11.2025.**

| Name : வணிதா | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சொறையனூரில் குடியிருந்து வருகிறேன். 15.09.2022 ம் தேதி இரவு 9 மணிக்கு ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா.1 குடும்பத்தாருக்கும் சண்டை நடந்தது. பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2) சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். நான் பார்வை மகஜர் வரைபடத்தில் தான் கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். சண்டை நடந்து அடுத்த நாள் காலை 10 மணிக்கு கையொப்பம் செய்தேன். நான் மட்டும் தான் கையொப்பம் செய்தேன். வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சின்னதாயி, கௌரி, குமரவேல் என் உறவினர் என்றால் ஆமாம். எந்த போலீசார் கையொப்பம் பெற்றனர் என்ற விவரம் தெரியாது என்றால் ஆமாம்.

3) என்னை போலீசார் அழைத்ததாக நந்தினி அழைத்து சென்றார். அ.சா.1 குடும்பத்தார் உறவினர் என்பதாலும், முன்விரோதம் உள்ளதாலும் அ.சா.1 க்கு

ஆரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரியை சின்னதாயி வகையறாக்கள் அனைவரும் அடித்துவிட்டார்கள், இந்த சம்பவம் சம்மந்தமாக 2ம் எதிரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அ.சா.1 குடும்பத்தார்கள் 6 பேர் மீது மேச்சேரி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணையில் நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். அந்த வழக்கிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**